விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 274 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 02 செவ்வாய்க்கிழமை (19.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## மீண்டும் ஆரம்பமாகியது திலீபனின் ஊர்திப் பவனி



(திருகோணமலை)

தமிழர் தாயகமான வன்னி பெருநிலப்பரப்பிலிருந்து "தியாக தீபம்" திலீபனின் நினைவு சுமந்த ஊர்திப்பவனி நேற்று மீண்டும் ஆரம்பமாகியது.

நேற்று முன் தினம் திருகோண 15

## சிங்களக் காடையர்களின் அடாவடிக்கு எதிராக

### முல்லைத்தீவில் கண்டன போராட்டம்

(முல்லைத்தீவு)

திருகோணமலையில் தியாகி திலீபனின் நினைவு ஊர்தி தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவில் நேற்று கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 03




# திலீபன் நினைவு ஊர்திக்கு தடை கோரிய பொலிஸார்

## அடியோடு மறுத்த வவுனியா நீதிமன்றம் பாதுகாப்பு வழங்கவும் உத்தரவு

(வவுனியா)

தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தியானது வவுனியா ஊடாக பயணிப்பதற்கு பொலிஸார் தடை கோரி வவுனியா நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தபோதும், நீதிமன்றம் அதனை அடியோடு நிராகரித்ததோடு குழப்பங்கள் ஏற்படாத வகையில் பொலிஸ் பாதுகாப்பினை வழங்குமாறு நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)



(கோப்புப்படம்)

### உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க தீர்மானம்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருந்த 2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர் தரப் பரீட்சையை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த 15

## மனித உரிமை துஷ்பிரயோகம் நல்லிணக்கத்தைப் பாதிக்கும்

### இலங்கை தொடர்பில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

(கொழும்பு)

இலங்கையில் தொடரும் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் உத்தேச நல்லிணக்க உண்மை ஆணைக்குழுவின் நோக்கங்களிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என, சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. 15

HUMAN RIGHTS WATCH

### சிமெந்தின் விலை உயர்வு

(கொழும்பு)

சிமெந்து விலை மேலும் 100 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய நிர்மாணத் 15

## முல்லை வந்தடைந்தது திலீபன் நினைவூர்தி

(முல்லைத்தீவு)

தியாக தீபம் திலீபன் நினைவூர்தி நேற்றுக் காலை முல்லைத்தீவை வந்தடைந்தது.

திருகோணமலையில் நேற்று முன்தினம் தியாக தீபம் திலீபனின் ஊர்தி மீதும் பாராளுமன்ற உறுப்பினர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு பல தரப்பினர் கண்டனங்கள் தெரிவித்த நிலையில் இது தொடர்பில் பொலிஸாரிடம் 15

### யாழ்.வைத்தியசாலைகளில் இரு நாட்கள் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் இரண்டு நாட்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. 15

## நினைவூர்தியை தொடரும் அரச புலனாய்வாளர்கள்


(கிளிநொச்சி)

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவை யொட்டிய பொத்துவில் தொடக்கம் நல்லூர் வரையான ஊர்திப் பவனி நேற்று நான்காவது நாளாக இடம்பெற்று வருகிறது.

ஊர்திப் பவனி நேற்று முன் தினம் திருகோணமலையில் தாக்குதலுக்கு உள்ளான பின்னர், நேற்று 4 ஆம் நாள் பவனியாக புதிதாக இன்னும் ஒரு ஊர்தியுடன் மாங்குளம் நகரில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணத்தை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 24 - 08 - 1971

இறப்பு 18 - 09 - 2023

# நடராசா நித்தியராஜ்

## (அமைப்பாளர் - முத்துராஜா புரடக்சன்)

தம்புரவளை தும்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா நித்தியராஜ் (அமைப்பாளர் - முத்துராஜா புரடக்சன்) அவர்கள் நேற்று (18.09.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - குணராஜவதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் நித்திய்பிரபா, நித்தியஜீவனா, காலஞ்சென்ற நித்தியசபேஷன், மனோரஞ்சிதமலர், குணரஞ்சிதமலர், முத்துராஜா, விமலராஜா, விமலராணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக கோரியடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோயில் ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை.

தகவல் : மனோரஞ்சிதமலர்
சி.குணரஞ்சிதமலர்
ந.நித்தியபிரபா (சகோதரிகள்)
தொ.இல. 077 018 2848

(17127)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகி திலீபனின் ஊர்தி மீதான தாக்குதல் கண்டித்து முல்லையில் கவனயீர்ப்பு

(நெளுக்குளம்)

**திருகோணமலையில் தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீதும் பாராளுமன்ற உறுப்பினர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையினைக் கண்டித்து முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முற்பகல் 11 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.**





தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் தேவிபுரம், வள்ளிபுனம் கிராம மக்கள் முதன்மை வீதியில் ஒன்றுகூடி கையில் பதாகைகளை தாங்கியவாறு, மக்கள் எதிர்ப்பு கோஷங்களை வெளிப்படுத்தி வள்ளிபுனம் சந்தி வரை சென்று அங்கு கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்கள்.

தியாகதீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தியது மாத்திரமல்ல பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியமை கண்டனத்துக்குரியது என்றும் சர்வதேச விசாரணை வேண்டுமென வலியுறுத்தியும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். திருகோணமலை தமிழரின் தலைநகர், தியாகி திலீபன் அகிம்சையின் அடையாளம், தமிழ் மக்கள் தமது தாயக மண்ணில் இறந்தவர்களை கூட வழிபடத் தடைதானா?, போராடுவோம் போராடுவோம்!! தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுவோம், ஐ.நா சபையே? தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா? வடக்கு -கிழக்கு தமிழரின் தாயக பூமி, நிறுத்து நிறுத்து! அடாவடியை நிறுத்து போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (நி-6-299)

## கார்களின் விலைகள் மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடும் போது குறிப்பிட்ட மட்டத்திற்கு குறைந்திருந்த கார்களின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

பல வகையான பொருட்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதித்துள்ள போதிலும் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படாததே இதற்குக் காரணம் என வாகன வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (நி-6)

## தியாக தீபம் திலீபனின் ஊர்திப்பவனி மீது தாக்குதல் சிங்கள மக்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புக் குரல்

(கொழும்பு)

தமிழர் தலைநகரில் தியாக தீபம் திலீபனின் ஊர்திப்பவனி தாக்கப்பட்டதற்கு காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் முக்கிய செயற்பாட்டாளராக திகழ்ந்த லஹிரு வீரசேகர தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது,

திருகோணமலையில் திலீபன் ஊர்திப்பவனி சென்ற வேளை ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தியவேளை பொலிஸார் அசமந்தமாக நடந்தவிதம் அப்பட்டமாக தெளிவாக தெரிகிறது.

ஊர்திப்பவனியை மட்டுமன்றி அதனுடன் சேர்ந்து வந்தவர்கள் மீதும் தலைக்கவசத்தால் தாக்குகின்றார்கள். ஆனால் தாக்குதல் சம்பவம் தொடர்பில் எவரும் முறையிடவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

1983 இல் இடம்பெற்ற கறுப்பு ஜூலை தாக்குதலின் போது மக்களை கொல்லும் வகையில் அரசாங்கம் காத்திருந்தது.

அத்துடன் காலிமுகத்திடலில் இடம்பெற்ற போராட்டத்தின் மீதும் சிங்கள பௌத்த குண்டர்களே தாக்குதலை நடத்தினர்.

எனவே அந்த மக்களுக்கு திலீபன் ஒரு மாவீரன். இந்த உண்மையை புரிந்து கொள்ளாதவர்கள் தமக்கு தாமே குழி வெட்டி கொள்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார். (நி-6)

## ஐ.நா சபையின் பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பமானது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது பொதுச்சபைக் கூட்டம் நேற்று ஆரம்பமானது. நாளை மறுதினம் வரை குறித்த கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தநிலையில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் தனது விசேட உரையை ஆற்ற வுள்ளார். (நி-6)

## மாணவர்களுக்கான விசா கட்டணம் அதிகரிப்பு

### பிரித்தானிய உள்துறை அமைச்சகம்

(லண்டன்)

பிரித்தானியாவில் சுற்றுலா மற்றும் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் விசா கட்டண உயர்வு எதிர்வரும் ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டண கட்டமைப்பின் கீழ் ஆறு மாதங்களுக்கு குறைவான காலம் தங்குவதற்கான சுற்றுலா விசாவுக்கு கூடுதலாக 15 பவுண்டுகள் (இலங்கை மதிப்பில் 6000 ரூபா) உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும் மாணவர் விசாவுக்கு கூடுதலாக 127 பவுண்டுகள் (50700 ரூபா) அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இங்கிலாந்துக்கு வெளியே அதாவது சர்வதேச மாணவர் ஒருவர் விசாவுக்கு விண்ணப்பிப்பதற்கான கட்டணம் 490 பவுண்டுகளாகவும் (196000 ரூபா), சுற்றுலா விசா 115 பவுண்டுகளாகவும் (46000 ரூபா) உயர்த்தப்பட்டுள்ளதாக பிரித்தானிய உள்துறை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

பெரும்பாலான வேலை மற்றும் சுற்றுலா விசாக்கள் விலையில் 15 சதவீதமும் முன்னுரிமை விசா, படிப்பு விசா விலையில் 20 சதவீதமும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து மாணவர் விசா விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு இந்தக் கட்டண உயர்வு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அடுத்த ஆண்டு முதல் மீண்டும் அதிகரிக்கும் மின் கட்டணம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் மீண்டும் மின்சார கட்டணங்கள் அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை சுமார் 5,000 கோடி ரூபாய் நட்டத்தை அடைந்துள்ளதாகவும் இந்த நட்டத்தை ஈடு செய்வதற்காக ஜனவரி மாதம் முதல் மீண்டும் மின்சார கட்டணங்களை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களுக்கு 24 மணித்தியாலமும் தடை இன்றி மின்சாரத்தினை வழங்குவதற்காக தனியார் மற்றும் கூடுதலான விலைக்கு மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் இலங்கை மின்சார சபைக்கு பாரியளவு நட்டம் ஏற்பட்டதாக மின் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் மீண்டும் மின்சார கட்டணத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மின்சார சபை இதுவரையில் மொத்தமாக 500 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



தமிழகத்தின் 13 மாவட்டங்களிலுள்ள 19 இலங்கைத் தமிழர் முகாம்களில் மொத்தம் 79.70 கோடி ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,591 புதிய வீடுகளை நேற்று முன்தினம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கையளித்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

- அலுவலக உதவியாளர்
- கணக்கு உதவியாளர்

வயது 18 – 55 வரை
பெண்கள் விரும்பத்தக்கது

தொடர்புக்கு : காலை 8.00 மணி
தொடக்கம் 5.30 மணிவரை

**077 2100 749**
bestbuilders1983@gmail.com

(17135)

## வேலையாட்கள் தேவை

- மேசன் (சம்பளம் 2000 – 2500)
- மேசன் உதவியாளர் (சம்பளம் 2000)
- தச்சு வேலை தெரிந்தவர்கள்
- தச்சு வேலை உதவியாளர்
- வெல்டர்
- வெல்டர் உதவியாளர்

தொடர்புக்கு : காலை 8.00 மணி
தொடக்கம் 5.30 மணிவரை

**077 2100 749**

(17135)


# ஆட்ட நாயகன் பரிசுத் தொகையை மைதான ஊழியர்களுக்கு வழங்கிய சிராஜ்

## குவியும் பாராட்டுகள்



(கொழும்பு)

ஆசிய கோப்பை கிரிக் கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந் தியா -இலங்கை அணிகள் மோதின. முதலில் ஆடிய இலங்கை அணி 50 ரன் னில் சுருண்டது. முகமது சிராஜ் ஒரே ஓவரில் 4 விக்கெட் உட்பட 6 விக்கெட் வீழ்த்தி இந்தியாவின் வெற்றிக்கு வித்திட்டார்.

இறுதியில், இந்தியா 8 ஆவது முறையாக ஆசிய கோப்பை வென்று சம்பி யன் ஆனது. இந்நிலையில், 6 விக்கெட் வீழ்த்திய முக மது சிராஜ் ஆட்ட நாயகனாக தேர்வு செய் யப்பட்டார். அவருக்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டது. பரிசு பெற்ற சிராஜ், அந்தத் தொகையை கிரிக்கெட் மைதான ஊழியர்களுக்கு வழங்குவதாக அறிவித்தார்.

இதுதொடர்பாக, சிராஜ் கூறுகையில், இந்த ரொக்கப் பரிசை மைதான வீரர்க ளுக்கு வழங்க விரும்புகிறேன். அவர்கள் அதற்கு தகுதியானவர்கள் என தெரிவித்தார். முகமது சிராஜின் இந்த செயலுக்கு ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் பாராட்டு தெரிவித்து வரு கின்றனர். (நி-6)


## துயர் பகிர்கின்றோம்




எமது கல்லூரி ஆசிரியர் திரு.க.அருந்தவநேசன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கதிர்காமதாசன் பத்மராணி**

அவர்கள் மறைந்த செய்தியறிந்து
துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயருற்றுள்ள
குடும்பத்தினர்க்கு அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ மகாஜனக் கல்லூரி**
**தெல்லிப்பழை**

(C-7284)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர்

**திரு. நாகராசா பார்த்தீபன்**

அவர்கள் கடந்த 13.09.2023 ஆம் திகதி யாழ் மாவட்ட
உயர் நீதிமன்றின் நீதிபதி உயர்திரு இரா.கண்ணன்
அவர்கள் முன்னிலையில் யாழ் மாவட்ட சமாதான
நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையினையிட்டு
அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும்
பல சிறப்புக்களுடன் வாழ
இறையருள் வேண்டி நிற்கின்றோம்.


**வாழ்த்துவோர்:**
கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்க பணியாளர் நலன்புரிச் சங்கம்,
ஊழியர் தொழிற் சங்கம்
கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டி

(17134)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2916

**நிஷாந்தினி**

என்னங்கடா ஒரு உழுந்து வடையும் டீயும் குடிச்சிட்டு வர்றதுக்குள்ள ஒரு கிரிக்கெட் மட்ச்சயே முடிச்சு வச்சிருக்கீங்க...




**நிலாத்**




**விசால்**

சார் ஊர்ல பாட்டி செத்துப் போயிட்டாங்க.
நாளைக்கு ஒரு நாளு லீவு வேணும்.
சரி தாராளமா எடுத்துக்கோ.
ஆனா சுடுகாட்டுல இருந்து
எனக்கு வீடியோ கால் பண்ணு...




**விஜி**

விநாயகனே வினை தீர்ப்பவனே...



கடைசியா உன்ன போன சதுர்த்திக்கு கொழுக்கட்டை எடுக்க வந்தப்போ பார்த்தது.

**வைசு**

கணவன்-நெஞ்சு வலிக்குது டாக்டருக்கு போன் பண்றியா.
மனைவி- உங்க செல்போன் பாஸ்வேர்ட் சொல்லுங்க?
கணவன்- இப்போ பரவாயில்லை.



**கரிகாலன்**

சேர் எனக்கு ஒரு சந்தேகம்.
என்னடா சந்தேகம் உனக்கு.



பிரிஞ்சல் கத்தரிக்காய் னு சொன்னீங்க.
சேர்ந்தால் என்ன காய்ன்னு சொல்லலியே சேர்.
(நான் இந்த ஸ்கூல்ல ரீச்சரா சேர்ந்ததே தப்புடா.)

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வருடத்தில் பகிடிவதை தொடர்பில் 57 மாணவர்களுக்கு வகுப்புத்தடை

## இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்

(கொழும்பு)

ஒரு வருட காலப்பகுதியில் நாட்டின் 17 பல்கலைக்கழகங்களிலிருந்து பகிடிவதை தொடர்பில் 36 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித்தார்.

அத்துடன், பகிடிவதைச் சம்பவங்கள் தொடர்பில் 57 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பகிடிவதைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக விசேட குழுவொன்று நிறுவப்பட்டுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ கருத்து தெரிவிக்கையில்,

பகிடிவதை தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க 076 54 53 454 என்ற வட்ஸ் அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன், இந்த தொலைபேசி இலக்கத்திற்கு போலியான தகவல்களை வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# சூடானில் வலுக்கும் மோதல் வெளியேற்றப்பட்ட இலங்கையர்கள்



(கார்ரூம்)

சூடானில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரினால் சூடானின் தலைநகரம் கார்டூம் இல் அமைந்துள்ள பல கட்டிடங்கள் தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நைல் நதிக்கு அண்மையில் காணப்படும் 18 மாடிகளை கொண்ட கட்டடம் ஒன்றில் பாரிய தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூடானின் அரச படையினருக்கும் கிளர்ச்சி குழுக்களுக்கும் இடையில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகின்றது.

இதுவரையான காலப்பகுதியில் சுமார் 12 ஆயிரம் பேர் வரை காயமடைந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வன்முறைகள் ஆரம்பித்த தினத்திலிருந்து இதுவரை சுமார் 20 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் அந்நாட்டிலிருந்து ஏனைய நாடுகளுக்கும் இலங்கைக்கும் வெளியேற்றப்பட்டுள்ளனர் என சூடான் உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், ஏதேனும் சந்தேகம் காணப்பட்டால் சூடானிலுள்ள இலங்கைக்கான அலுவலகத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி விபரங்களை அறிந்துக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

# சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

மேலும் சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதில் செயலாளரின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மின் விநியோகம் சார்ந்த அனைத்து சேவைகள், பெற்றோலியம், எரிபொருள் உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வைத்தியசாலைகள், சிகிச்சை நிலையங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அதிவிசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி. நகுலேஸ்வரி தயானந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்.

**அம்பலவாணர் கனகசபை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.




ஆவணி விநாயகர் சதுர்த்தி விரத உற்சவத்தினை முன்னிட்டு நேற்று யாழ்.மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விநாயகர் ஆலயங்களில் சிறப்பான பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இணுவில் திருப்பதி வேங்கடவரர் தேவஸ்தானத்திலும் ஆவணி விநாயகர் சதுர்த்தி விரதபூஜைகள் பக்தி பூர்வமாக இடம்பெற்றன. (படம்:கஜிந்தன்)

# இராசிபலன்

19.09.2023
புரட்டாதி 02, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி முற்பகல் 11.43 மணிவரை

சுவாதி பிற்பகல் 12.47மணிவரை
சுபநேரம் -10.33-12.03 மணிவரை
இராகுகாலம்-03 .03-4.33மணிவரை

சந்திராஷ்டமம்-
ரேவதி, அச்சுவினி.

வளவன்

**மேஷம்** – தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** – தொலைதூரத்தில் இருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு, வருமானப் பெருக்கத்துக்கான வழியைக் கண்டுகொள்வீர்கள்.

**துலாம்** – செலவுக்கு ஏற்ப வருமானம் வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** – கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**ரிஷபம்** – பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல்நலன் சீராகும், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – நண்பர்களினால் வளர்ச்சி கூடும், நினைத்தது நிறைவேறும் நாள், மனை சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பணத்தேவைகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** – மனதில் தேவையற்ற குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்,

**கும்பம்** – தொழில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், இறைவழிபாட்டால் இன்பம் காணும் நாள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** – சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் குதூகலம் கூடும், பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி** – உடல்நலன் சீராகும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், திடீர் பணவரவு மனதுக்கு மகிழ்ச்சி தரும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள்.

**தனுசு** – சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், அதிஷ்ட வாய்ப்புகள் அலை மோதும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மீனம்** – வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே கோவமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

அன்புள்ள சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முச்சக்கரவண்டி- மோ.சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் காயம்

(சாவகச்சேரி )

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை அண்மித்த ஏ9வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியுடன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை அண்மித்த கிளை வீதி ஒன்றின் ஊடாக வேகமாக வந்த மோட்டார்சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது முச்சக்கரவண்டி தடம்புரண்டதில் அதில் பயணித்த பெண் காயமடைந்துள்ளார். விபத்தினை ஏற்படுத்திய மோட்டார்சைக்கிளை செலுத்தி வந்த நபர் மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு விட்டு தப்பித்துச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)



கரவெட்டி கமநல உத்தியோகத்தர் யோ.ஸ்ரீதேவி தலைமையில் கரணவாய் கிழக்கு உச்சில் விவசாய வாய்க்காலில் துப்புரவுப் பணிகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன. (படம்- மகாலிங்கம்)

## குடியிருப்புகளை அண்மித்த பகுதிகளில் கொட்டப்படும் கழிவுகள்

### பல்வேறு சுகாதார பிரச்சினைகளை எதிர்கொள்வதாக கிராம மக்கள் குற்றச்சாட்டு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி- மகிழங்கேணி மற்றும் உதய சூரியம் கிராமத்தில் இருந்து சுமார் 300மீற்றர் தூரத்தில் நகரசபையின் கழிவுகள் கொட்டப்படும் இடம், கொல்களம் மற்றும் மயானம் ஆகியன காணப்படும் நிலையில் அப் பகுதி மக்கள் பல்வேறுபட்ட சுகாதார பிரச்சனைகளுக்கு தினமும் முகம் கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 2016 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் மகிழங்கேணி மற்றும் உதயசூரியன் கிராமங்களில் 60 இற்கும் மேற்பட்ட காணியற்ற குடும்பங்களுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட காணிகள் மக்கள் குடியிருக்க முடியாத கடலோடு இணைந்த மாரி காலத்தில் நீர் தேங்கக்கூடிய தாழ்வான பகுதியாகும். இருப்பினும் வீட்டுத்திட்டக் கனவை மக்கள் மனதில் விதைத்து பலரது விமர்சனங்களையும் கடந்து காணி வழங்கப்பட்டிருந்தது.

அவ்வாறு வழங்கப்பட்ட காணிகளில் குடியிருக்கும் மக்கள் சாவகச்சேரி நகரசபை உள்ளிட்ட திணைக்களங்களின் அலட்சியத்தால் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

நகரசபையினர் உரிய கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ளாமலும்-பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றியும் கழிவுகளை மக்களுடைய குடியிருப்பிற்கு மிக அருகாமையில் கொட்டுவதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு அந்த மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே நகரசபையின் கழிவு மையத்தினை வேறிடத்திற்கு நகர்த்தி தம்மை நோய் நொடியில் இருந்து காப்பாற்றுமாறும் கோருகின்றனர்.

மக்களுக்கு சேவையாற்றும் பொறுப்பு வாய்ந்த திணைக்களம் என்ற வகையில் நகரசபை தமது நலன் பற்றி சிந்திப்பதே பொருத்தமானது என்றும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-30)

## உடைந்த பாலத்தை உடனே சீரமைக்குக

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கிழக்கிலிருந்து விக்னேஸ்வரா கல்லூரிக்கு செல்லும் வீதி மதகு உடைந்து தொங்கிய நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதி பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் செல்லும் முக்கியமான வீதி ஆகும்.

பாலம் உடைந்து. தொங்கு நிலையில் உள்ளதால் அந்த வீதியால் பயணிப்போர் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே உடைந்த பாலத்தை உடனடியாக திருத்த வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-60)

## நினைவேந்தல் உரிமை தமிழர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(கிளிநொச்சி)

தியாக தீபம் திலீபன் நினைவு ஊர்தி மீதான இனவெறி தாக்குதலை கண்டிக்கின்றோம் என வட கிழக்கு மாகாணங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் கண்டன அறிக்கை விடுத்துள்ளது.

பொத்துவிலில் இருந்து நல்லூர் நோக்கி சென்று கொண்டிருந்த தியாக தீபம் திலீபனின் உருவம் தாங்கிய ஊர்தி மீது நேற்று முன்தினம் மாலை, திருகோணமலை, கப்பல்துறையில் வைத்து இராணுவ புனையாய்வாளர்கள் மற்றும் பொலிஸார் சூழ்ந்திருக்க இனவெறி கொண்ட காடையர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தியாகி திலீபன் தமிழ் மக்களின் உரிமைக்காய் காந்தியை விஞ்சிய வகையில் அகிம்சை வழியில் போராடிய போராளியாவார். மேலும் சர்வதேசத்தினால் அவரது தியாகம் வியந்து பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான பெருமை மிக்க பெருந்தகையின் திருவுருவப்படத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட இனவெறித் தாக்குதல் கண்டிக்கத்தக்கது என்பதுடன் எமது நினைவேந்தல் உரிமை எமக்கு மறுக்கப்பட்டுள்ளதை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

மேலும் இவ்வூர்தியில் சென்று கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் அவருடன் பயணித்தவர்கள் மீதான தாக்குதல்கள் இலங்கையில் சிறப்புரிமை கொண்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லை என்பதனை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறான சூழலில் உள்நாட்டுக்குள் விசாரணை தீர்வு என்பவை சாத்தியமற்றது என்று நாம் தொடர்ந்து கூறிவருவதன் காரணங்களை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியுள்ளது என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## கோழிகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மூதாட்டி ஒருவருக்கு வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்ட கோழிகள் கூண்டோடு கடந்த சனிக்கிழமை திருடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் -கச்சாய் பகுதியில் வசிக்கும் மூதாட்டியின் கோழிக்கூடே கோழிகளுடன் களவாடிச் செல்லப்பட்டுள்ளது.

வறுமையில் வாடும் மூதாட்டிக்கு வாழ்வாதார உதவியாக கோழிகள் வழங்கப்பட்டதை அடுத்து கோழிகள் மூலம் வருமானம் ஈட்டி தனது வாழ்வை நடத்தி வந்துள்ளார்.


இந்நிலையில் கடந்த சனிக்கிழமை மூதாட்டியின் கோழிகளை கூண்டோடு திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர். அது தொடர்பில் மூதாட்டியினால், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-5-33)

## குடைசாய்ந்து விபத்திற்குள்ளான டிப்பர்

(சாவகச்சேரி)

நாவற்குழி பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் ஒன்று குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது.

ஏ-9 வீதி ஊடாக பயணித்த குறித்த வாகனமே நேற்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. மேலும் இது தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜேந்திரன் எம்.பி மீது தாக்குதல் ஆறு பேருக்கு விளக்கமறியல்


(திருமலை)

திருகோணமலை சர்தாபுர பகுதியில் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி மீது தாக்குதல் நடத்தியதுடன் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 14 பேரை தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களையும் நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதிவான் அண்ணாத்துரை தர்ஷினி முன்னிலையில் நேற்று குறித்த சந்தேக நபர்களை ஆஜர்படுத்திய போது இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்துடன் கைது செய்யப்பட்ட ஆறு பேரில் இரண்டு பெண்கள் அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது. (நி-6)

# தேசிக்காயின் விலை நாளுக்கு நாள் அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தேசிக்காய் ஒன்றின் விலை நாளுக்கு நாள் உயர்வடைந்து வருகின்றது.

இந்நிலையில் தற்போது தேசிக்காய் ஒன்றின் விலை 30 ரூபா முதல் 58 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதுடன் குறிப்பாக மாத்தளை உள்ளிட்ட சில பகுதிகளில் தேசிக்காய் ஒன்றின் விலை 30 ரூபா முதல் 38 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை நுவரெலியா உள்ளிட்ட பெருந்தோட்ட பகுதிகளில் தேசிக்காய் ஒன்றின் விலை 58 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றன.

இதேவேளை, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கிராம் தேசிக் காயின் விலை 1200 ரூபாவாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் உதவி அதிபராக கடமையாற்றிய

**திரு.சோ.ஸ்ரீஸ்கந்தராஜா**

(SLPS-3,BBA(Hons),PGDE,MEd,PGDEM)

**அவர்கள் யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் அதிபராக கடமையைப் பொறுப்பேற்றுள்ள இவ்வேளையில் அவரது பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

(17132)



## வாழ்த்துகின்றோம்

29 வருட கால அலுவலக உதவியாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு.டானியல் அமலராஜா அவர்களை வாழ்த்துகின்றோம்.

**திரு.டானியல் அமலராஜா**
(கல்விசாரா ஊழியர் –விசேடதரம்)

**சேவைக்காலம்**

01.05.1994-16.05.1996-
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
17.05.1996-15.04.1997-
கிளி/சிவபாதகலையகம்
16.04.1997-07.09.1999-
முல்/பாண்டியன்குளம் ம.வி
08.09.1999-31.10.2003-
முல்/மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயம்
01.11.2003-02.10.2012-
முல்/உடையார்கட்டு ம.வி
03.10.2012-18.09.2016-
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
19.09.2016- 19.09.2023-
யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்




இவரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும் நலமாகவும் அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்,
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்,உரும்பிராய்.

(17130)


## யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்(வ.து)

### பதவி வெற்றிடங்கள்

பதவி - உள்ளகக் கணக்காய்வாளர்
சம்பள குறியீட்டு இல - 105/06
சம்பள அளவுத்திட்டம் - 22045 - 290x10 - 340x10 - 28345

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022 இற்கு அமைய ஏனைய படிகளும் வழங்கப்படும்.

01 அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமைகள்.

அ) கூட்டுறவு ஊழியர் 07ஆவது சம்பளத் திட்டப்பதவியில் முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 02ஆண்டு கால அனுபவம்/கூட்டுறவு ஊழியர் 08ஆவது. சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலைப் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்குச் சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 06ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 07 ஆண்டு கால அனுபவம்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுக்களங்களில் மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 07 ஆண்டுகால அனுபவம்.

பதவி - எழுதுநர்
சம்பள குறியீட்டு இல - 302/12
சம்பள அளவுத்திட்டம் - 18820-170x10-185x10-22370

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022 இற்கு அமைய ஏனைய படிகளும் வழங்கப்படும்.

01. அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத் திட்டப்பதவியில் எழுதுநர்/ கணக்காய்வு எழுதுநர்/காசாளர்/கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 2ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத் திட்டப்பதவியில் கணக்குப்பதிவாளர் எழுதுநர்/ காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில்/பயிற்சி நிறுவனமொன்றில் கணக்கியல்/கணக்குப்பதிவியல் தொடர்பான பயிற்சி நெறிக்கான சான்றிதழ்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி.

ஈ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

பதவி- கணனிப்பக்க உருவாக்குநர்
சம்பள குறியீட்டு இல - 322/10
சம்பள அளவுத்திட்டம் 19745- 225x10 - 250×10-24495

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022 இற்கு அமைய ஏனைய படிகளும் வழங்கப்படும்.

01 அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் கணனிப்பக்க உருவாக்குநர் பதவியில் 02ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 12ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணனிப்பக்க உருவாக்குநர் பதவியில் 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழி. கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தியுடன் அரச/அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழுநேர MS OFFICE/ அதனையொத்த கணனி பாட நெறிக்கான சான்றிதழ்.

அல்லது

இ) அரச/ அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழு நேர கணனி பாட நெறிக்கான சான்றிதழ். அத்துடன் இப்பதவியில்/அதனையொத்த பதவியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 01ஆண்டு கால அனுபவம்.

### மேற்குறித்த பதவிகளிற்கான பொது நிபந்தனைகள்

- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருப இல.60/2004 அமைய கணனித்தகைமையும் அவசியம் தேவை.
- வயதெல்லை 18 - 45க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- கூட்டுறவு பணியாளர்களிற்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
- விண்ணப்பத்துடன் சகல சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்பட வேண்டும்.
- நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் நிறுவனத்தினூடாக நிறுவன தலைவரின் சிபாரிசுடன் விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி -2023.10.03 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
- விண்ணப்பிக்க வேண்டிய முகவரி : செயலாளர்,யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 826/12,கே.கே.எஸ்.வீதி, உப்புக்கடை லேன் தட்டாதெரு யாழ்ப்பாணம்.
- மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையோர் விண்ணப்பப் படிவத்தை சமாசத்தின் கடமை நேரத்தில் ரூபா20/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
- தபால் உறையில் மேற்புறத்தில் உரிய பதவி குறிப்பிடப்பட வேண்டும்.

(சி-7278)

செயலாளர்,
யாழ்.மாவட்ட சி.க.கூ.ச.சமாசம்,யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 201

### நேர்மைக்கு கிடைத்த வெகுமதி

பொதுப்பணித்துறை ஊழியராயிருந்து ஓய்வு பெற்றவர் பச்சைத்தண்ணி பத்மநாபன்.

ஊழல் புரையோடிப்போன ஒரு துறையில், பச்சைத் தண்ணீர் கூட அடுத்தவரிடம் கேட்டு வாங்கி குடிக்க மாட்டாராம் பொறியாளர் பத்மநாபன். அதனால் அவருக்கு சக ஊழியர்களால் கிண்டலாக சூட்டப்பட்ட பட்டப்பெயர் தான் பச்சைத்தண்ணி பத்மநாபன்.

ஒருநாள் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தவர் தனது உயிர் பிரியப்போகிறது என்பதை அறிந்து தனது பிள்ளைகளை நான் எப்படி வாழ்ந்தேன் என்று உங்களுக்கு தெரியும்.

நீங்களும் எந்தச் சூழலிலும் நீதி தவறாமல் தேவைகளை சுருக்கிக் கொண்டு நேர்மையாய் வாழ்ந்து என் பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்று நா தழுதழுக்க சொன்னார்.

இரண்டு மகன்களும் அமைதியுடன் - கேட்டுக் கொண்டிருக்க, கடைசி மகள் ப்ரியா மட்டும் கோபத்தில் உங்கள் அறிவுரைகளையும் கேட்க முடியாது. ஊழல் பேர்வழிகள் என்று நீங்கள் கூறியவர்கள் எல்லோரும் அவர்கள் குழந்தைகளுக்கு பல தலைமுறைகள் சொத்து சேர்த்து விட்டு சென்றிருக்கிறார்கள். ஆனால் நாம் இருக்கும் இந்த வீடு கூட வாடகை வீடு தான். நேர்மையாயிருந்து நாங்கள் பட்டதெல்லாம் போதும். நாங்கள் எங்கள் வழியைப் பார்த்துக் கொள்கிறோம் என்றாள். அவளை உற்று நோக்கியபடி பத்மநாபனின் உயிர் அடுத்த சில நிமிடங்களில் பிரிந்தது. காலங்கள் உருண்டன.கல்லூரி படிப்பை எப்படியோ தட்டுத் தடுமாறி முடித்த ப்ரியா ஒரு புகழ் பெற்ற கட்டுமான நிறுவனத்திற்கு பணிக்கு விண்ணப்பித்து நேர்முகத்தேர்வுக்கு சென்றாள். அந்த பணிக்குத் தேவையான தகுதியுடைய நபரை ஏற்கனவே பேனல் உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்து விட்டாலும் ஒரு பார்மாலிட்டிக்காக இண்டர்வ்யூவை நடத்திக் கொண்டிருந்தனர்.

ப்ரியாவின் முறை வந்ததும் உள்ளே அழைக்கப்பட்டாள். அவளது ரெஸ்யூமை பார்த்த பேனல் மெம்பர் ஒருவர் "உன் அப்பா மிஸ்டர் பத்மநாபன் பொதுப் பணித்துறையிலிருந்து ஓய்வு பெற்றவரா? என்றார்.

இந்த கம்பனி இன்னைக்கு இந்தளவு வளர்ந்திருக்குதுன்னா அதுக்கு அவரும் ஒரு காரணம். அவருக்கு என்னோட நன்றிக்கடனை செலுத்த இதை விட பெரிய வாய்ப்பு கிடைக்காதும்மா. யூ ஆர் செலக்டட். நாளைக்கே நீ வேலைக்கு வரலாம் என்றார். அந்நிறுவனத்தின் எச்.ஆர்.பிரிவில் அதிகாரியாக ப்ரியாவுக்கு வேலை கிடைத்தது. இரண்டு ஆண்டுகள் சென்றன.

ப்ரியா பணியிடத்தில் நல்ல பெயர் எடுத்தாள். இதற்கிடையே அவர்கள் சிங்கப்பூர் கிளை அலு வலகத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர் வேலையை ராஜினாமா செய்து விட, அங்கு தலைமை பொறுப்புக்கு தகுதியான ஆள் தேவைப்பட்டார்.

நிர்வாகக் குழுக்கள் ஒன்று கூடி விவாதித்து ப்ரியாவையே சிங்கப்பூர் பிரிவுக்கு தலைமைப் பொறுப்பில் நியமிப்பது என முடிவானது. மாதம் பத்து லட்சம் ரூபாய் சம்பளம், கம்பனி சார்பாக ஒரு கார், அப்பார்ட்மெண்ட் என அத்தனை வசதிகளும் அவளுக்கு கிடைத்தன. கடுமையாக உழைத்து சிங்கபூர் நிறுவனத்தின் லாபத்தை பன்மடங்கு அதிகரிக்கச் செய்தாள் ப்ரியா. அவளை லோக்கல் பிஸ்னஸ் பத்திரிகை ஒன்று பேட்டி கண்டது.உங்கள் வெற்றிக்கு காரணம் என்ன என்று கருதுகிறீர்கள் எனக் கேட்க, இது எல்லாம் என் அப்பா எனக்கு போட்ட பிச்சை. அவர் மறைந்த பிறகு தான் நான் உணர்ந்தேன். பொருளாதார ரீதியாக அவர் ஏழையாக மறைந்தாலும் ஒழுக்கத்திலும் நேர்மையிலும் நாணயத்திலும் அவர் கோடீஸ்வரராக மறைந்தார். என் அப்பா இறக்கும் தருவாயில் அவரது நேர்மைக்காக அவரை நான் அவமதித்தேன் என கண்களை துடைத்தபடி சொன்னாள் ப்ரியா. நீங்கள் எப்படி? பத்மநாபனை போலவா?உண்மையான நல்ல பெயரை சம்பாதிப்பது என்பது மிகமிகக் கடினம். அதன் வெகுமதி உடனே வருவதில்லை. ஆனால் அது எவ்வளவு தாமதமாக வருகிறதோ அந்தளவு நீடித்து நிலைத்து நிற்கும் என்றாள் பிரியா.

## இந்திய ஜியோ நிறுவனத்தால் புதிய இன்டநெட் சேவை அறிமுகம்




(டில்லி)


இந்திய சந்தையில் ஜியோ நிறுவனம் தனது புதிய வயர்லெஸ் இன்டர்நெட் சேவையான ஜியோ ஏர்ஃபைபரை இன்று அறிமுகம் செய்ய உள்ளது.

வீடு மற்றும் அலுவலகங்களில் எளிய முறையில் பயன் படுத்தும் வகையில் ஜியோ ஏர்ஃபைபர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக நொடிக்கு 1.5 ஜிகா பிட் வேகத்தில் இன்டர்நெட் இணைப்பை இதில் பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பயனர்களுக்கு தனித்துவ அனுபவத்தை வழங்கும் நோக்கில் இது அறிமுகம் செய்யப்பட உள்ளதாக ரிலையன்ஸ் குழுமத்தின் ஆண்டு பொதுக் கூட்டத்தில் முகேஷ் அம்பானி தெரிவித்திருந்தார். (4-5)

## ஆதித்யா எல்-1 விண்கலம் சூரியனை நோக்கி இன்று பயணம்



(டில்லி)

ஆதித்யா எல்-1 விண்கலம் தனது புவி சுற்றுப் பாதை பயணத்தை முடித்துக்கொண்டு இன்று முதல் சூரியனை நோக்கிச்செல்ல விருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்காக ஆதித்யா எல்-1 எனும் நவீன விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது. இந்த விண்கலம் பி.எஸ்.எல்.வி சி-57 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள 2 ஆவது ஏவுதளத்தில் இருந்து கடந்த செப்டெம்பர்2 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்நிலையில், ஆதித்யாவின் புவி சுற்றுப்பாதை பயணம் நேற்றுடன் நிறைவு பெற்று தொடர்ந்து, விண்கலத்தை இன்று புவி நீள் வட்ட சுற்றுப்பாதையில் இருந்து விலக்கி, சூரியனை நோக்கிப் பயணிக்க வைக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட உள்ளனர்.

அதன் பின்னர் ஆதித்யா விண்கலம் சுமார் 100 நாட்கள் பயணித்து, புவியில் இருந்து 15 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ள எல்-1 பகுதி அருகே, சூரிய ஒளி வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட உள்ளது. அங்கிருந்தபடியே எல்-1 பகுதியை மையமாகக் கொண்ட சுற்றுப்பாதையில் வலம் வந்தவாறு, சூரியனின் கரோனா மற்றும் போட்டோ ஸ்பியர், குரோ மோஸ்பியர் பகுதிகளை ஆதித்யா ஆய்வு செய்யும்.

இதற்காக அதில் 7 வகையான சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றில் 4 கருவிகள் சூரியனின் நேர் எதிர்திசையில் நிலை நிறுத்தப்பட்டு, நேரடியாக கண்காணித்து தகவல்களை வழங்கும்.

மீதமுள்ள 3 கருவிகள் சூரியனில் ஏற்படும் நிகழ்வுகளால், அதன்புறவெளியில் உருவாகும் மாற்றங்களை எல்-1 பகுதியில் உள்ள துகள்கள் மற்றும் புலங்களை ஆராய்ந்து கணிக்கும். இதன்மூலம் விண்வெளியில் கிரகங்களுக்கு இடையேயான சூரிய இயக்கவியலின் விளைவு குறித்த அரிய விபரங்கள் கிடைக்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (4-5)

## 2 விமானங்கள் மோதியதில் இரண்டு பேர் உயிரிழப்பு





(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நெவாடா மாகாணத்தில் உள்ள ரெனோ நகரில் நடந்த தேசிய செம்பியன்ஷிப் விமான கண்காட்சியில் நடந்த விமான விபத்தில் இரண்டு விமானிகள் உயிரிழந்துள்ளனர்.

விமான கண்காட்சியின் போது தரையிறங்க முற்பட்ட போது இரண்டு விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் அந்நாட்டின் தேசிய போக்குவரத்து பாதுகாப்பு சபை, பெடரல் விமான சேவை நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.(4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# அகதிகளாக வரும் உக்ரைனியர்களுக்கு மறைவாக உதவிவரும் ரஷ்ய மக்கள்

**(மொஸ்கோ)**

**2022 பெப்ரவரியில் ரஷ்யா தனது அண்டை நாடான உக்ரைனை ஆக்கிரமித்தது. ரஷ்யாவை எதிர்த்து அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் கடுமையாக போரிட்டு வருகின்ற நிலையில், உடமைகளை இழந்து அகதிகளாக வரும் உக்ரைன் மக்களுக்கு உதவி வரும் ரஷ்ய மக்களின் மனிதநேயம் பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றது.**



ரஷ்ய அரசுக்கு தெரியாமல், உக்ரைன் அகதிகளுக்கு ரஷ்யாவை சேர்ந்த பலர் மனிதாபிமான உதவிகளை செய்து வருகின்றனர்.

இராணுவ தாக்குதல் காரணமாக ரஷ்யாவிற்கோ அல்லது ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைனின் பிராந்தியங்களுக்கோ, உக்ரைனின் பிற பகுதிகளிலிருந்து மக்கள் அகதிகளாக தினம் வந்திறங்குகின்றனர்.

தங்களது வீடு, உடைமைகள் மற்றும் செல்வம் அனைத்தையும் இழந்து அகதிகளாக எதிர்காலம் குறித்த அச்சத்துடன் வந்திறங்கும் உக்ரைனியர்களுக்கு ரஷ்ய மக்கள் தன்னார்வலர்களாக உதவி செய்து வருகின்றனர்.

கலினா அர்ட்யோமென்கோ என்ற ரஷ்ய பெண்மணி உக்ரைன் அகதிகளுக்காக இணையவழியாக நன்கொடை பெற்று உடைகள், மருந்துகள் மற்றும் உணவு வசதி போன்றவற்றை செய்வதோடு ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்கு ரயிலில் வருபவர்களுக்கு வேலைவாய்ப்பு, தங்குமிடம் போன்றவற்றையும் ஏற்பாடு செய்கிறேன். என்னை போல் ஆயிரக்கணக்கான ரஷ்யர்கள் உதவி செய்கிறார்கள். பாதுகாப்பு காரணங்களால் இது குறித்து நாங்கள் வெளியில் பேசுவதில்லை என தெரிவித்தார்.

மற்றொரு ரஷ்யப் பெண்ணான ல்யுட்மில்லா எங்களை விட மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டவர்களை நாங்கள் வெறுமனே வேடிக்கை பார்த்து கொண்டு நிற்க முடியாது என்றும் நாங்கள் அவர்களுக்கு உதவியே ஆக வேண்டும் எனக் கூறினார்.

2022 டிசெம்பர் மாதமே ரஷ்யாவில் உக்ரைன் நாட்டு அகதிகள் 10 லட்சத்திற்கும் மேல் உள்ளனர் என ஐ.நா சபை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5)

## வெள்ளத்தை அடுத்து கண்ணிவெடி அபாயம் லிபிய மக்களைத் துரத்தும் இடர்கள்

(திரிபோலி)


வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட லிபிய நகரமான டெர்னாவில் தற்போது கண்ணிவெடிகள் காரணமாக மக்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

சுத்தமான தண்ணீரைத் தேடி மக்கள் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட தொலைதூரப் பகுதிகளுக்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

லிபியாவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் இதனால் 11,300 பேர் உயிரிழந்துள்ள அதே நேரம் 10,000 பேரைக் காணவில்லை என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சடலங்களைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4-5)

## புதிய செயற்கைக் கோளை வெற்றிகரமாக ஏவியது சீனா



(பீஜிங்)

விண்வெளியில் ஆதிக்கம் செலுத்தும் வகையில் சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் "யோகன்-39" என்னும் தொலை உணர்வு செயற்கைக் கோளை ஜிசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து நேற்று முன்தினம் ஏவியது.

இந்த செயற்கைக்கோள் அதிநவீன புவி கண்காணிப்பு பணியை மேற்கொள்ளும் என்றும் யோகன் -39 லோங் மார்ச்-2D கேரியர் ரொக்கெட் மூலம் 12:13 மணிக்கு (பீஜிங் நேரம்) ஏவப்பட்டது என்றும் அந்த செயற்கைக் கோள் திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நுழைந்தது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (4-5)

## கிம் ஜாங்கின் ரஷ்யப் பயணத்திற்கு தென்கொரியா கடும் குற்றச்சாட்டு



(பியாங்யாங்)

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் ரஷ்யப் பயணத்தினை தென்கொரியா கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் தனது ரஷ்ய பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன் தினம் நாடு திரும்பிய நிலையில் இந்தக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் தெரிவிக்கையில்,

ஆயுத பரிமாற்ற ஒப்பந்தம் குறித்து வடகொரியா பேச்சுவார்த்தை நடத்தியது ஐ.நாபாதுகாப்பு சபையின் தீர்மானத்திற்கு எதிரானது.

எனவே வடகொரியா-ரஷ்யா இடையே இந்த இராணுவ ஒத்துழைப்பை சமாளிக்க ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும் என மற்ற உலக நாடுகளுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (4-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர். ஜோகறஞ்சினி நகுலேஸ்வரன்

மலர்வு-26.01.1967 (சுமதி) உதிர்வு-19.09.2019





நம்ப மறுக்குதம்மா எம் இதயம்
நீ பிரிந்து 4 வருடங்கள் சென்றாலும்
உன் அழகிய சிரிப்பும்
இனிமை நிறைந்த பேச்சும்
எல்லோரையும் ஈர்க்கும் உன்
வசிகரப் புன்னகையும்
உன் உடலை விட்டு உயிர் பிரிந்ததை
அறிந்து இதயமே உறைந்து போய்
நின்றதை யாரறிவார்?
நீ இறக்கவில்லை
எங்களுடன் உயிரோடுயிராய்
என்றுமே நிலைத்திருப்பாய்.

(சி-7281)

சுமதி இல்லம்
பொன்னம்பல வித்தியாலய வீதி,
மூத்த விநாயகர் கோவிலடி, நெல்லியடி.

தகவல்
குடும்பத்தினர்.

# புரட்டாசி மாத இராசி பலன்கள் 18.09.2023-17.10.2023

## மேஷம்

**விடா முயற்சியே வெற்றி தரும் என்று கூறும் மேஷ இராசி வாசகர்களே!**

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் இருக்கும் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். எனவே தொழில், உத்தியோகம் ஆகியவற்றில் அதிக கவனத்துடன் இருப்பது நல்லது.

கன்னி இராசியில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சஞ்சரிப்பதால் எண்ணிய காரியங்கள் நடந்தேற ஏராளமாகச் செலவிடும் சூழல் உருவாகும்.

### புதன் வக்கிரம்

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் புரட்டாசி மாதம் 10 ஆம் திகதி கன்னி இராசியில் வக்கிரம் பெறுகிறார்.

கன்னி இராசி புதனுக்கு உச்ச வீடாகும். புதன் வலிமை இழந்திருப்பது யோகம் தான். எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றை குறிப்பது ஆறாம் இடமாகும். அந்த இடத்திற்கு அதிபதி வலிமை இழக்கும் பொழுது எதிரிகள் விலகுவர். லாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். உடல்நலம் முற்றிலும் சீராகும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். கடன்சுமை குறையப் புதிய வழிபிறக்கும்.

தொடர்ந்து பொருளாதார பற்றாக் குறையில் சிக்கித் தவித்த உங்களுக்கு, இப்பொழுது சரளமான பணப்புழக்கம் ஏற்பட்டு சந்தோஷத்தை தக்க வைத்துக் கொள்வீர்கள்.

### துலாம் - செவ்வாய்

புரட்டாசி 17 ஆம் திகதி துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசி நாதன் சப்தம ஸ்தானத்திற்கு வருவது யோகம் தான். மேலும் குரு பார்வையால் குருமங்கல யோகம் ஏற்படுகிறது. இதன் விளைவாக காலம் காலமாக காத்திருந்தும் நடைபெறாத சுப காரியங்கள் இப்பொழுது திடீரென முடிவாகும்.

உடன்பிறப்புகள் உங்களுக்கு உறு துணையாக இருப்பர். இடம், பூமி வாங்குவது பற்றியோசிப்பீர்கள். கட்டிய வீட்டைப் பழுதுபார்ப்பது போன்றவற்றிலும் கவனம் செலுத்த இயலும்.

"வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொண்டு பணிபுரியச் செல்லலாமா?" என்று சிந்திப்பீர்கள். உடன்பிறப்புகள் வழியில் ஒரு நல்ல காரியம் நடைபெறும். தொழில் வெற்றி நடைபோடும்.

புதிய பங்கு தாரர்கள் வந்திணைந்து பொருளாதார நிலையை உயர்த்த வழிவகுத்துக் கொடுப்பர்.

### துலாம் - புதன்

புரட்டாசி 28 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு சகாய ஸ்தானாதிபதியான புதன் சப்தம ஸ்தானத்திற்கு வருவது யோகம்தான். மாமன், மைத்துனர் வழியில் சுமுகமான உறவு ஏற்படும்.

தொழில், வியாபாரம் தொடர்பாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். பயணங்களால் பலன் உண்டு. பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்குப் புதிய பங்குதாரர்களால் வருமானம் உயரும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும்.

மாணவ-மாணவிகள் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. பெண்களுக்கு பிரச்சினைகள் அதிகரித்தாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் பிறக்கும். விரயங்கள் தவிர்க்க முடியாததாக அமையும்.

## ரிஷபம்

**கொள்கைப் பிடிப்போடு செயற்படும் ரிஷப இராசி வாசகர்களே!**

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். விரய ஸ்தானத்தில் லாபாதிபதி குரு இருப்பதால் விரயத்திற்கு ஏற்ற வருமானம் உண்டு. வீடு மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை ஏற்படலாம். வரும் மாற்றங்கள் நன்மை தரும் விதம் அமையும். ராகு-கேது பெயர்ச்சிக்குப் பின்னால் இடையூறு சக்திகள் அகலும். இனிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும்.

### புதன் வக்கிரம்

புரட்டாசி மாதம் 10 ஆம் திகதி, கன்னி இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். அதே நேரத்தில் அந்த வீடு புதனுக்கு உச்ச வீடாகும். தன - பஞ்சமாதிபதியான புதன் உச்சம் பெறும் பொழுது பணப் புழக்கத்திற்கு குறைவிருக்காது. பூர்வீக சொத்துக்களால் லாபம் உண்டு. பிள்ளைகளின் வழியில் இதுவரை தாமதப்பட்ட காரியங்கள் இனி ஒவ்வொன்றாக நடைபெறும். சில்லறைக் கடன்களைக் கொடுத்து மகிழ்வீர்கள். உறவினர்களின் ஒத்துழைப்பு திருப்தி தரும்.

### துலாம் - செவ்வாய்

புரட்டாசி 17ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். சப்தம - விரயாதிபதியான செவ்வாய் 6 ஆம் இடத்திற்கு வரும்பொழுது, வாழ்க்கைத் துணை வழியே எடுத்த சில முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வேலை அல்லது தொழில் சம்பந்தமாகச் செய்யும் முயற்சிகள் கைகூடும்.

"வாங்கிய இடத்தை விற்க முடியவில்லையே, வாங்கிய இடத்தில் வீடு கட்ட முடியவில்லையே" என்றெல் லாம் வருத்தப்பட்டவர்களுக்கு, இப் பொழுது சொத்து சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும்.

உடன்பிறப்புகள் உங்களுக்கு உறு துணையாக விளங்குவர். செவ்வாய் விரயாதிபதியாகவும் விளங்குவதால் ஒருசில நல்ல காரியங்களுக்காகச் செலவிடும் சூழல் உண்டு.

### துலாம் - புதன்

புரட்டாசி 28 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மறைவிடத்திற்கு வருகிறாரே என்று நீங்கள் நினைக்க வேண்டாம்.

மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் உண்டு. எனவே பொருளாதார நிலை உயரும். எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டு மென்று நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிக்க இயலும். திட்ட மிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நடைபெறும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புகழ் கூடும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த லாபம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

மாணவ- மாணவிகளுக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். பெண்களுக்கு குடும்ப ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணையும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். சுபகாரிய முயற்சி கைகூடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் நடவடிக்கைகள் இனப்பிரிவை வெளிக்காட்டுகிறது

## கஜேந்திரன் எம்.பி மீதான தாக்குதலுக்கு சந்திரகுமார் கண்டனம்

(கிளிசொந்றி)

இலங்கை பொலிஸாரின் நடவடிக்கைகள் தமிழர், சிங்களவர் என்ற மனநிலையிலேயே காணப்படுகிறது.

இதனை பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் பொலிஸார் முன்னிலையில் சில வன்முறைக் கும்பலால் தாக்கப்படும்போது பொலிஸார் நடந்துகொண்ட விதம் வெளிப்படுத்தப்படுகின்றது என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் மு.சந்திரகுமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் செல்வராசா கஜேந்திரன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினர்.


அவர் இந்த நாட்டின் ஓர் உயர்ந்த சபையின் கௌரவ உறுப்பினர். அவரை தெருவில் ஒன்று கூடிய சில கும்பல்கள் சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் முன்னிலையில் தாக்குவது என்பது மிகவும் காட்டுமிராண்டித்தனமான செயல்.

தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவருக்கே இந்த நிலைமை என்றால் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலைமை எப்படியிருக்கும்? வன்முறைகளை தடுத்து சட்டத்தை நிலைநிறுத்த வேண்டிய பொலிஸார் அந்த இடத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காது இருந்தது என்பது தமிழ் மக்கள் விடயத்தில் அவர்களின் நிலைப்பாட்டை அப்பட்டமாக காட்டி நிற்கிறது.

இதுதான் இந்த நாட்டின் நிலைமை. தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு கஜேந்திரன் மீதான தாக்குதல் சம்பவம் என்பது ஒரு நல்ல உதாரணம்.

நினைவேந்தலுக்கான உரிமை வழங்கப்பட்டிருந்த நிலையில் அதனை மேற்கொள்ளவிடாது வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது மட்டுமன்றி மக்கள் பிரதிநிதி ஒருவரை வீதியில் விரட்டி விரட்டி தாக்குபவர்கள் மீதும் அந்த தாக்குதல் சம்பவத்தைக் கட்டுப்படுத்தாது நின்ற பொலிஸார் மீதும் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். (4-5)




நிரல் கல்வி அமைச்சின் வழிகாட்டலுக்கமைவாக சுதுமலை சிம்மிய பாரதி வித்தியாலயத்தில் எதிர்காலத்திற்கான சுற்றுச் சூழல் கழக அனுசரணையுடன் ஓசோன் தினத்தை முன்னிட்டு ஓசோன் படலத்தை பாதுகாப்பது தொடர்பான போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவருக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை பாடசாலை முதல்வர் துரைரட்ணம் தலைமையில் இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# தலைமன்னார்-கொழும்பு இடையே சொகுசு ரயில் சேவை விரைவில்

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்திற்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையில் புதிய சொகுசு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ரயில் தலைமன்னார் துறைமுக நிலையத்தில் இருந்து அதிகாலை 4.15 மணிக்குப் புறப்பட்டு 10.34 மணிக்கு கோட்டை நிலையத்தை அடைந்து மாலை 3.35 மணிக்கு கோட்டையிலிருந்து புறப்பட்டு இரவு 10.48 மணிக்கு தலைமன்னார் துறைமுகத்தை சென்றடையுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ரயில்வே துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

இந்த ரயிலில் குளிரூட்டப்பட்ட இரண்டு முதல் வகுப்பு பெட்டிகள், இரண்டு இரண்டாம் வகுப்பு முன்பதிவு செய்யப்பட்ட இருக்கை பெட்டிகள் மற்றும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்பு சாதாரண பெட்டிகள் உள்ளதாக தெரிவித்தார். (4-5)

# சர்வதேச சிறுவர் தின ஓவியப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் நிறுவனமானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்றிட்டத்தினால் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஓவியப் போட்டியும் கலை நிகழ்வும் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

அதற்கமைய போட்டி யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை மண்டபத்தில் ஒக்டோபர் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஓவியப்போட்டி 'இயற்கையோடு இணைந்த நம் வாழ்வு' எனும் தலைப்பில் பிரிவு 1 - தரம் 4முதல் 5 வரை, பிரிவு-2 தரம் 6 -தரம் 8 வரை, பிரிவு 3 - தரம் 9-தரம்-12 வரை என்றவாறு நடத்தப்படவுள்ளன.

எனவே போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அதிபரின் அனுமதியுடன் பெயர் விபரங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களிற்கு 021 222 7314, 077 670 1349 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (4-5)

# தாராபுரம் பாடசாலையின் புதிய அதிபர் நியமனத்திற்கு எதிராக மக்கள் போராட்டம்

(மன்னார்)

மன்னார் வலயக்கல்வி பணிமனைக்குட்பட்ட தாராபுரம் மன்/அல்மினா மகா வித்தியாலயத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதேநேரம் அதிபர் தகுதியை பூர்த்தி செய்து நேர்முகத்தேர்வில் கலந்து கொண்ட தாராபுரம் கிராமத்தை சேர்ந்த அதிபரை நியமிக்குமாறு கோரியும் அப்பகுதி மக்களால் நேற்றுத் திங்கட்கிழமை ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.



மன்னார் தாராபுரம் அல் மினா பாடசாலைக்கு முன் பகுதியில் உள்ள வீதியில் காலை 7.45 தொடக்கம் 8.30 மணிவரை ஊர்மக்கள் பலர் இணைந்து பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு புதிய அதிபர் நியமனத்திற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக மன்/அல்மினா பாடசாலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள், பெறுபேறுகள் தொடர்ச்சியாக சரிவு நிலையில் காணப்படுவதாகவும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் தங்களது பதவிக் காலம் நிறைவடைந்தும் பாடசாலையின் நிர்வாகத்தில் இருந்து விலகாதிருப்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதேநேரம் புதிய அதிபர் நியமனத்திலும் பதவிக் காலம் நிறைவடைந்தும் நிர்வாகத்தில் இருக்கும் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலையீடு காரணமாகவே தகுதி வாய்ந்த தங்கள் கிராமத்தைச் சேர்ந்த அதிபர் நியமிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் எழுத்து மூல மகஜர் ஒன்றினை உயர் அதிகாரிகளுக்கு கையளித்ததாகவும் குறித்த மகஜர் தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

எனவே குறித்த பிரச்சினையில் மன்னார் வலய கல்வி பணி மனை மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தலையீடு செய்து தமது கிராமத்தை சேர்ந்த அதி பரை குறித்த பாடசாலைக்கு நியமிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-285)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 400 | 500 |
| தக்காளி | 200 | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 180 | 120 | 150 | 200 |
| கரட் | 350 | 300 | 300 | 300 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 260 | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 200 | 160 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 150 | 200 | 250 |
| லீக்ஸ் | 160 | 140 | 180 | 200 |
| பீற்றூட் | 140 | 120 | 150 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 400 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 160 |
| போஞ்சி | 400 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 180 | 250 |
| கீரை – 1 பிடி | 100 | 70 | 80-150 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1000 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-90 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 400 | 450 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 250 | — | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | — | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 50 | 120 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 286





போதும்!" என்றாள் பூங்குழலி.

கரை ஓரத்தில் அலை மோதும் இடத்தைக் தாண்டிய பிறகு "இனிமேல் படகில் ஏறிக் கொள்ளலாம்!" என்று சொல்லி, அவள் முதலில் ஏறிக் கொண்டாள். வந்தியத்தேவனும் தாவி ஏறினான். அப்போது படகு அதிகமாக ஆடியது. அந்த ஆட்டத்தில் வந்தியத்தேவன் கடலில் விழுந்து விடுவான் போலத் தோன்றியது சமாளித்துக்கொண்டு உட்கார்ந்தான். ஆயினும் அவனுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

"இனிமேல் ஏதாவது பேசலாம் அல்லவா?" என்று கேட்டான்.

"நன்றாகப் பேசலாம். உனக்கு நடுக்கம் நீங்கியிருந்தால் பேசலாம்!" என்றாள் பூங்குழலி.

"நடுக்கமா? யாருக்கு நடுக்கம்? அதெல்லாம் ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லாவிட்டால் சரி!"

"பாய்மரம் கட்ட வேண்டாமா?"

"பாய்மரம் கட்டினால் கரையில் உள்ளவர்கள் ஒரு வேளை நம்மைப் பார்த்து விடுவார்கள். ஓடி வந்து பிடித்துக் கொள்வார்கள்."

"இனி அவர்கள் வந்தால் ஒரு கை பார்த்து விடுகிறேன். நீ கொஞ்சமும் பயப்பட வேண்டாம்!" என்று வந்தியத்தேவன் தன் வீரப்பிரதாபத்தைச் சொல்லத் தொடங்கினான்.

"இப்போது எதிர்க்காற்று அடிக்கிறது. பாய்மரம் விரித்தால் படகை மறுபடி கரையிலே கொண்டு போய் மோதும். நடுநிசிக்கு மேல் காற்றுத் திரும்பக்கூடும். அப்போது பாய்மரம் விரித்தால் பயன்படும்!" என்று பூங்குழலி கூறினாள்.

"ஓ உனக்கு இதெல்லாம் நன்றாய்த் தெரிந்திருக்கிறது அதனாலேதான் உன்னை அழைத்துப் போகும்படி உன் தந்தை சொன்னார்."

"என் தந்தையா? யாரைச் சொல்லுகிறாய்?"

"உன் தகப்பனாரைத்தான் சொல்லுகிறேன். கலங்கரை விளக்கின் தியாகவிடங்கக் கரையரைச் சொல்லுகிறேன்."

"கரையில் இருக்கும் போது தான் அவர் என்னுடைய தந்தை, கடலில் இறங்கிவிட்டால்"

"தகப்பனார் கூட மாறிப் போய்விடுவாரா, என்ன?"

"ஆமாம் இங்கே சமுத்திர ராஜன்தான் என் தகப்பனார். என்னுடைய இன்னொரு பெயர் சமுத்திரகுமாரி. உனக்கு யாரும் சொல்லவில்லையா?"

"சொல்லவில்லை! அது என்ன விசித்திரமான பெயர்?"

"சக்கரவர்த்தியின் இளைய குமாரனைப் 'பொன்னியின் செல்வன்' என்று சிலர் சொல்லுகிறார்கள் அல்லவா! அது போலத்தான்!"

இதைக் கேட்டதும் வந்தியத்தேவன் தனது அரைச் சுற்றுச் சுருளைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

அதைக் கவனித்த பூங்குழலி, "பத்திரமாக இருக்கிறதல்லவா?" என்று கேட்டாள்.

"எதைப் பற்றிக் கேட்கிறாய்?"

"உன் அரைச் சுருளில் வைத் திருக்கும் பொருளைப் பற்றித்தான்."

வந்தியத்தேவனுடைய மனத்தில் "சொரேல்" என்றது. ஒரு சிறிய சந்தேகம் ஜனித்தது.

(தொடரும்...)

'நீ சும்மா இரு!' என்று பூங்குழலி சமிக்ஞை செய்தாள்.

படகை லாவகமாகத் தள்ளிக் கடலில் இறக்கினாள். சிறிதும் சத்தமின்றிக் கடலில் அப்படகு இறங்கியது.

வந்தியத்தேவன் படகில் ஏறிக்கொள்ள யத்தனித்தான். "உஷ்! சற்றுப் பொறு! கொஞ்ச தூரம் போன பிறகு நீ ஏறிக் கொள்ளலாம்!" என்று பூங்குழலி மெல்லிய குரலில் கூறிவிட்டுப் படகைப் பிடித்து இழுத்துக் கொண்டே போனாள்.

வந்தியத்தேவன் தானும் உதவி செய்ய எண்ணிப் படகைத் தள்ளினான். படகு நின்று விட்டது.

"நீ சும்மா வந்தால்



# சிறுவர் அரங்கம்

## மனக்கோட்டை மண்கோட்டை ஆச்சே

(நேற்றைய தொடர்ச்சி)



ஒரு உண்மையான ராஜாவைப் போல உடை அணிந்திருந்தான். அருமையான பட்டாடைகள் பளபளக்க, தங்க சங்கிலிகளும் வைர மோதிரங்களும் பகலோன் ஒளியில் தகதகக்க, மாணிக்கக்கல் பதித்த சரிகைத்தலைப் பாகை சிரத்தை அலங்கரிக்க, கம்பீர தோற்றத்தில் நின்றான். ராஜாவிற்கு ராமன் வணக்கம் கூறினான். ராஜாவோ ராமனை ஏளனமாக பார்த்தான்.

சிரித்தபடியே, "ஏன் இவ்வளவு அசிங்கமாக இருக்கிறாய் ராமா!. உன்னை பார்க்கவே பரிதாபமாக இருக்கிறாய். இவ்வளவு தொலைவும் நடந்து வந்தாயா? உன்னிடம் ஒரு மாட்டு வண்டி கூடவா இல்லை. அட பிச்சைக்காரா!. என்னை பார்த்தாயா ஒரு ராஜாவைப்போல் இருக்கிறேனா இந்த ராஜா. தேவலோகத்தில் இருப்பவர்கள் கூட என்னைப்பார்த்து பொறாமைப் படுவார்கள் அல்லவா?" என தற்பெருமைப்பட்டு கொண்டிருந்தான். "இவ்வளவும் எனது திறமையால் வந்தது. உனது நேர்மையை வைத்து ஒரு கட்டை மாட்டுவண்டி கூட உன்னால் வாங்க முடியவில்லையே" என மேலும் ஏளனம் செய்தான். ராமன் உடனே, "போதும் ராஜா. நான் ஏழையாக இருக்கலாம். இதுவே எனக்கு போதுமானது. நிறைவாக இருக்கிறேன்" என்றான். தொடர்ந்து, நான் அறிவில் மந்தமானவன் இல்லை என்பது உனக்கும் தெரியும்.

விரும்பியிருந்தால் உன்னைவிட அதிக பணமும் அதிகாரமும் அடைந்திருப்பேன். உன்னைப் போல் ஏமாற்றுவதை நான் விஷமாக பார்க்கிறேன்" என்றான் கோபமாக. உடனே "மூடடா வாயை அவ்வளவு திறமைசாலி என் வீட்டிற்கு பிச்சை எடுக்க எதற்கு வந்தாய்? என்றான் ராஜா. அதற்கு ராமனோ "நான் ஒன்றும் உன் வீட்டுக்கு பிச்சை எடுக்க வரவில்லை. தாகமா இருந்தது தண்ணீர் கேட்க வந்தேன். இது உன் வீடு என்று கூட தெரியாது" என்றான்.

"ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடையாது. போடா வெளியே!." என்று ஆத்திரமாக கத்தினான் ராஜா. "சரிப்பா நான் போகிறேன்" என்று போக திரும்பினான் ராமன். ராஜாவோ விடுவதாய் இல்லை. ராமனை வெளியே தூக்கி ஏறிய தனது பணியாட்களுக்கு உத்தரவிட்டான். ராமனுக்கு அப்போது கோபம் வந்தது. "நான் உனக்கு எந்த கெடுதலும் செய்யவில்லை. தேவையில்லாமல் என்னை அவமானப்படுத்தாதே.

அழிந்து போவாய்" என சாபமிட்டான் ராமன். "என்ன எனக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லையா? பள்ளியில் எனக்கு உதவி செய்ய மறுப்பாயே அது என்னவாம் .

என் ஆசை தீர உன்னை அவமானப்படுத்துவேன். என்னடா செய்யமுடியும் உன்னால். சிறையில் போட்டு விடுவாயா? நான் இந்த நாட்டின் முதலமைச்சராகும்.

எல்லா மந்திரிகளுக்கும் வேலை சொல்பவன் நான். சேனாதிபதி எனக்கு சிநேகிதன். தனாதிகாரி என் மாமனார். தலைமை நீதிபதி என் மைத்துனன். தெரிந்ததா?" என்று கத்தினான் ராஜா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் இளைஞர்களே! தாயகத்தின் நினைவோடு வெளிநாடு செல்லுங்கள்

இலங்கையில் இருந்து 80 சதவீதமான இளைஞர்கள் வெளிநாடு செல்லவுள்ளதாக களனிப் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களின் வெளியேற்றம் தொடர்பில் களனிப் பல்கலைக்கழகம் ஒரு பொறுப்பான ஆய்வைச் செய்துள்ளது.

பல்கலைக்கழகமென்றால், இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை அந்தப் பல்கலைக்கழகம் நிரூபித்துள்ளது.

இந்த ஆய்வுக்குள் தமிழ் இளைஞர்களும் அடங்குவர்.

எனினும் சிங்கள இளைஞர்களில் கணிசமானவர்கள் வெளிநாடு சென்று கொண்டிருக்கின்றனர் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

ஆம், ஒரு காலத்தில் இந்த மண்ணில் வாழ முடியாது என்ற நிலையில் நம் தமிழ் இளைஞர்களும் தமிழ்ப் புத்திஜீவிகளும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

அவர்களின் புலம்பெயர்வு தமிழினத்தைக் காப்பாற்றியதுடன் உலகம் முழுவதிலும் ஈழத் தமிழர்கள் வாழ்வதற்கும் வழியேற்பட்டது.

உண்மை. எங்கள் சொந்த மண்ணில் தமிழ் மக்கள் எதுவும் செய்ய முடியவில்லை. குருந்தூர்மலையில் இருக்கின்ற ஆதிசிவனைக்கூட வணங்க முடியவில்லை.

ஆனால் கனடாவில் அமைச்சராக, சிங்கப்பூரில் ஜனாதிபதியாக எங்கள் ஈழத் தமிழன் பதவி வகிக்க முடிகிறது.

அதுதவிர இலண்டனில் முருகன் கோயில் கட்டி குடமுழுக்குச் செய்து இலண்டன் வீதியில் தேர் ஓடுகிறது.

கனடா நாட்டில் எம் தமிழ் மக்களின் தைப் பொங்கல் விழாவில் கனேடியப் பிரதமர் பங்கேற்றுள்ளார்.

எனவே தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நம் இளைஞர்கள் வெளிநாடு செல்ல வேண்டும்.

இதை நாம் கூறும்போது எங்கள் தமிழ்த் தேசத்தில் இருந்து வேர் பிடுங்கி வெளிக்கிடுங்கள் என்று நாம் கூறுவதாக யாரும் பொருள்படுத்தி விடாதீர்கள்.

மாறாக வளம் கொழிக்கும் வெளிநாடுகளுக்குச் சென்று உயர்கல்வியைத் தொடருங்கள். அங்கு வேலை செய்யுங்கள். வசதி வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள். உலகம் முழுவதும் தமிழன் வாழ்கிறான். அவன் உலகத்தை ஆள்கிறான் என்ற புகழ் நிச்சயம் சாத்தியமாகும்.

இது சாத்தியமாகும்போது, ஈழத் திருநாட்டில் தமிழர் தாயகம் தனித்துவம் பெறும்.

ஆம், அன்புக்குரிய தமிழ் இளைஞர்களே! வெளிநாடு செல்வதற்குத் தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை விரைவாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நேரியபாதையில் உங்கள் பயணம் அமையட்டும்.

ஏமாற்றுப் பேர் வழிகளிடம் அகப்பட்டுவிடாதீர்கள். நீங்கள் இங்கு எதிர்பார்த்தவை ஏமாற்றமாக இருக்கும். ஆனால் என்ன செய்வது நீங்கள் நம்பிய தமிழ் அரசியல் தரப்புகள் நேர்மையற்றவர்கள். அவர்கள் தங்களை வளப்படுத்திவிட்டார்கள்.

நீங்கள் கோசம் போட்டதும் வாக்களித்ததும் அவர்களை வாழ வைத்தது.

அது உங்களையோ உங்கள் குடும்பங்களையோ வாழவைக்கவில்லை.

ஆகையால் தமிழர் தாயகத்தின் நினைவோடு வெளிநாடு செல்லுங்கள். அங்கும் இங்கும் தமிழர்களாக வாழுங்கள்.

# நல்லூர் திருவிழா காலத்தில் தவறவிட்டதை பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருவிழா காலத்தின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் என யாழ் மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ திருவிழாவின் போது பக்தர்களால் தவறிடப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருட்கள், ஆவணங்கள், வங்கிப்பரிவர்த்தனை அட்டை, பணப்பைகள், மணிக்கூடு, தேசிய அடையாள அட்டை, திறப்புக்கள் என்பன யாழ்ப்பாணம் மாநகர சபையின் உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டு தற்போது மாநகர சபை அலுவலகத்தில் உள்ளன.

இவற்றின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் உரிய அடையாளத்தை உறுதிப்படுத்தி மாநகர சபையின் நிர்வாக கிளையில் பிற்பகல் 2.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# ஐ.எம்.எப்புடன் புதிய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாது

## பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய உடன்படிக்கைகள் எதுவும் இல்லை. வெளிநாட்டுக் கடன்களை மேம்படுத்தும் பணியும் விரைவில் நிறைவடையும்.

வெளிநாட்டுக் கடனை மேம்படுத்துவதற்கான அடிப்படைத் தேவையாக இருந்த உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் தற்போது முழுமையாக நிறைவடைந்துள்ளது.

எனவே வெளிநாட்டுக் கடன் மேம்படுத்தலும் விரைவில் நிறைவடையும் என எதிர்பார்க்கின்றோம். மேலும் ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயம் நாட்டுக்கு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் மிகவும் முக்கியமான சந்தர்ப்பம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# நீரில் அடித்து சென்ற இருவர் உயிரிழப்பு

நீரில் அடித்துச்சென்ற இருவர் உயிரிழந்த சம்பவங்கள் ரத்தொட்ட மற்றும் கிரியெல்ல பகுதிகளில் பதிவாகியுள்ளது.

கிரியெல்ல - தம்முல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவர் ஹல்தொல ஆற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ரத்தொட்ட - லொன்வில் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபர் ஒருவர் கருவாவ பகுதியில் ஆற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக ரத்தொட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கிரியெல்ல - ரத்தொட்ட பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

# 3 பொலிஸார் மீது தாக்குதல்

தலாதுவ பகுதியில் நபர்கள் சிலரின் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் அதிகாரி ஒருவர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் இருவர் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலாதுவ - குருதெனிய வீதியில் குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தலாதுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி அநாவசியமான முறையில் வீடொன்றுக்குள் உள் நுழைந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

காயமடைந்த பொலிஸ் அதிகாரி மற்றும் கன்ஸ்டபிள் அதிகாரி விடுமுறை நாட்களில் வீட்டுக்கு சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

குறித்த அதிகாரிகள் மூவரும் தாக்கப்பட்டமைக்கான காரணம் இதுவரை வெளியாகியில்லாத நிலையில் சம்பவம் தொடர்பில் தலாதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

# செப்ரெம்பர் மாதத்தில் 1,500 க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவு

செப்ரெம்பர் மாதத்தில் இதுவரை நாட்டில் 1,583 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டில் இதுவரை நாட்டில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 63,461 ஆக உள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் கூற்றுப்படி, டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 38 ஆக உள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 13,000 க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

# பகிடிவதைக்கு எதிராக தேசிய குழு அமைப்பு

(கொழும்பு)

பகிடிவதைக்கு எதிரான தேசிய குழுவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கடந்த 12 மாதங்களில் 36 பகிடிவதை சம்பவங்கள் பதிவாகியுள்ளது டன் அது தொடர்பில் 57 மாணவர்களுக்கு வகுப்பு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், சமணங்குளம், சி.இ.சி கல் உடைக்கும் ஆலை, அளுத்வத்த, போகஸ்வேவா, மாமடுவ கிராமம், மகாகச்சக்கொடிய, மல்மடுவா (மகாகச்சக்கொடிய), நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிங்கம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# துப்பாக்கி வெடித்ததில் இளைஞன் காயம்

(கொழும்பு)

தந்தைக்கு சொந்தமான இடத்தில் இருந்த கட்டுத் துப்பாக்கி ஒன்றை இளைஞர் ஒருவர் எடுக்கச் சென்ற பொழுது, குறித்த துப்பாக்கி இயங்கியதில், குறித்த இளைஞர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடு பொலிஸார் இதனைத் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் சிகிச்சைகளுக்காக மடு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த நபர் 21 வயதுடையவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த துப்பாக்கியை பொலிஸார் மீட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரின் இனம் சாரா அரசியல் ஒன்பதாவது குடியரசுத் தலைவராக

## இலங்கை வம்சாவளித் தமிழர் தர்மன் தெரிவு

02

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### இஸ்தானாவைப் பற்றிய விபரங்கள்

பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கம் தனது ஆளுநர்களுக்காகக் கட்டிய இஸ்தானா 1959ஆம் ஆண்டில் சிங்கப்பூர் சுயாட்சி பெற்றபோது, அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இஸ்தானாவிற்கு மலாய் மொழியில் மாளிகை என்று பொருள். 1990களில் விரிவான புதுப்பிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் 6 நிகழ்ச்சி அரங்குகள் உள்ளன. வெளிநாட்டிலிருந்து வரும் பிரமுகர்களையும் விருந்தினர்களையும் வரவேற்க அவை பயன்படுத்தப்படுகின்றன. இஸ்தானா கட்டடம், ஸ்ரீதுமாசிக் (Sri Temasek), The Villa, ராணுவக் காவலர் அறை என அங்கு 4 முக்கியக் கட்டடங்கள் உள்ளன. 1960ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட நாள்களில் இஸ்தானா பொது மக்களுக்குத் திறந்து விடப்படுகிறது. தேசியப் பூங்காக் கழகம் இஸ்தானாவில் நில வனப்புத் திட்டங்களை மேற்கொள்கிறது.

### ஒதுக்கப்பட்ட அதிபர் தேர்தல்

ஏப்ரல் 1, 2017 இல் நடைமுறைக்கு வந்த அரசியலமைப்புத் திருத்தங்கள், சிங்கப்பூரில் உள்ள ஒரு சமூகத்தைச் சேர்ந்த எவரும் ஜனாதிபதியின் மிக சமீபத்திய ஐந்து பதவிக் காலங்களுக்கு ஜனாதிபதியாக இருக்கவில்லை என்றால், அந்த ஜனாதிபதித் தேர்தல் அச் சமூகத்திற்கு ஒதுக்கப்படும். அத் தேர்தலுக்கான விண்ணப்பதாரர்கள் வழக்கமான தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்ய வேண்டும். மற்றும் சமூகங்கள் சீன சமூகம், மலாய் சமூகம் மற்றும் இந்திய அல்லது பிற சிறுபான்மை சமூகங்கள். மேலும் இந்த சமூகங்களைச் சேர்ந்த நபர்கள் பின்வருமாறு வரையறுக்கப்படுகிறார்கள்.

(1) சீன சமூகம் - "தன்னை சீன சமூகத்தின் உறுப்பினராகக் கருதும் மற்றும் அந்த சமூகத்தால் சீன சமூகத்தின் உறுப்பினராக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு நபரும்".

(2) மலாய் சமூகம் - "மலாய் இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அல்லது வேறு விதமாக இருந்தாலும், தன்னை மலாய் சமூகத்தின் உறுப்பினராகக் கருதும் மற்றும் பொதுவாக அந்த சமூகத்தால் மலாய் சமூகத்தின் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு நபரும்".

(3) இந்திய அல்லது பிற சிறுபான்மை சமூகங்கள் - "இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எந்தவொரு நபரும் தன்னை இந்திய சமூகத்தின் உறுப்பினராகக் கருதி, அந்தச் சமூகத்தால் இந்திய சமூகத்தின் உறுப்பினராக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர் அல்லது சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த எந்தவொரு நபரும் மலாய் அல்லது இந்திய சமூகம் தவிர".

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று, இரண்டு அல்லது மூன்று சமூகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையம் அறிவிக்கலாம். ஒரு தேர்தல் இரண்டு அல்லது மூன்று சமூகங்களுக்கு ஒதுக்கப்பட்டால், முதலில் தேர்தலுக்கு முன் அதிக எண்ணிக்கையிலான தொடர்ச்சியான பதவிக் காலத்திற்கு ஜனாதிபதியாக ஒரு பிரதிநிதி இல்லாத சமூகத்திற்கு தேர்தல் ஒதுக்கப்படுகிறது.

வேட்புமனுத் தினத்தன்று சமூகத்தைச் சேர்ந்த யாரும் வேட்பாளராக நிற்கவில்லை அல்லது முன்னிறுத்தப்படமாட்டார் என்ற அர்த்தத்தில் தேர்தல் "முற்றிலும் தோல்வியடைந்தால்", இல்லாத சமூகத்திற்கு ஒதுக்கப்பட்ட தேர்தலுக்கு புதிய தேர்தல் ஆணையம் வெளியிடப்பட வேண்டும். அடுத்த அதிக எண்ணிக்கையிலான தொடர்ச்சியான பதவிக் காலங்களுக்கு ஜனாதிபதியாக ஒரு பிரதிநிதி மற்றும் பல அனைத்து ஒதுக்கப்பட்ட தேர்தல்களும் முற்றிலும் தோல்வியடைந்தால், ஒரு வெளிப்படையான தேர்தல் (வேட்பாளர்கள் எந்த குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை) நடத்தப்படும்.

தேர்தல் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, குடியரசுத் தலைவர் தேர்தல்கள் சட்டத்தில் பாராளுமன்றம் திருத்தம் செய்து, குடியரசுத் தலைவர் பதவிக் காலங்கள் கணக்கிடப்படுகிறது. இதன் விளைவாக 2017 தேர்தல் மலாய் சமூகத்திற்கே ஒதுக்கப்பட்டது. மலாய் சமூகத்தைச்சேர்ந்த அலிமா யாகோப் (Halimah binti Yacob) என்பவர் 2017 ஆண்டு அதிபராக தெரிவு செய்யப்பட்டு 2023ஆம் ஆண்டு ஒகஸ்ட் வரை சிங்கப்பூர் குடியரசுத் தலைவராக இருந்தார். சிங்கப்பூர் வரலாற்றில் முதல் பெண் அதிபர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

### அதிகாரத்தில் இருந்த அதிபர்கள்

1. யூசுப் இசாக் ( Yusof bin Ishak) என்பவர் சிங்கப்பூரின் முதலாவது அதிபர். 1965ஆம் ஆண்டில் இருந்து 1970ஆம் ஆண்டு வரை (5 வருடம் 106 நாட்கள்) பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டு சிங்கப்பூரின் அதிபராகப் பதவி வகித்தவர். அந்த நாட்டின் வரலாற்றில் முதல் அதிபர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார். இவர் 1967 இல் இரண்டாவது முறையாகவும் நாடாளுமன்றத்தால் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



யூசுப் இசாக்
சிங்கப்பூரின்முதல் அதிபர்
1965-1970

2. யோ பின் செங் (Yeoh Ghim Seng) சிங்கப்பூர் அரசியல்வாதி ஆவார். அவர் 1970 மற்றும் 1988 இற்கு இடையில் சிங்கப்பூர் நாடாளுமன்றத்தின் சபாநாயகராக பணியாற்றினார். உலகின் எந்தப் பாராளுமன்றத்திலும் நீண்ட காலம் பணியாற்றியவர்களில் இவரும் ஒருவர். 1970 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி சிங்கப்பூர் அதிபர் யூசோப் இஷாக் இறந்ததற்கும் மற்றும் 1971 ஜனவரி 2 ஆம் திகதி ஜனாதிபதி பெஞ்சமின் ஷீரஸ் பதவியேற்பதற்கும் இடையே யோ பின் செங் சிங்கப்பூரின் பதில் அதிபராக பணியாற்றினார்.

3. பெஞ்சமின் ஹென்றி ஷீரஸ் (Benjamin Henry Sheares) ஒரு சிங்கப்பூர் அரசியல்வாதி, மருத்துவர் மற்றும் கல்வியாளர் ஆவார். அவர் 1971 முதல் 1981 இல் இறக்கும் வரை (10 வருடம் 130 நாட்கள்) சிங்கப்பூரின் இரண்டாவது ஜனாதிபதியாக பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டு பணியாற்றினார். இவர் 1970,1974,1978 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை நாடாளுமன்றத்தால் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



பெஞ்சமின் ஹென்றி ஷீரஸ்
(Benjamin Henry Sheares)
சிங்கப்பூரின் இரண்டாவது ஜனாதிபதி (1971-1981)

4. சிங்கப்பூர் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் யோ பின் செங் (Yeoh Ghim Seng) சிங்கப்பூரின் பதில் அதிபராக 1981இல் 5 மாதங்கள் பணியாற்றினார்.

5. தேவன்நாயர்என்று அழைக்கப்படும் தேவன் நாயர் செங்கர வெட்டில் (Devan Nair அல்லது Chengara Veetil Devan Nair) என்பவர் மூன்றாவது சிங்கப்பூர் அதிபர் மற்றும் மலேசிய சிங்கப்பூர் அரசியல்வாதியும் ஆவார். இவர் மலேசியாவில் பிறந்து வளர்ந்து இருந்தாலும் 1981ஆம் ஆண்டில் இருந்து 1985ஆம் ஆண்டு வரை (3 வருடம் 156 நாட்கள்) சிங்கப்பூரின் அதிபராகப் பதவி வகித்தவர்.

சிங்கப்பூரின் அதிபராக இருந்த பெஞ்சமின் சியர்ஸ் (Benjamin Sheares) மரணத்திற்குப் பிறகு, தேவன் நாயர், சிங்கப்பூர் நாடாளுமன்றத்தால் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1981 ஒக்டோபர் 23ஆம் திகதி அதிபராகப் பதவியேற்றார். இருப்பினும் 1985 மார்ச் 28ஆம் திகதி, தெளிவற்ற சூழ்நிலையின் காரணமாக இவர் தன் அதிபர் பதவியைத் துறப்பு செய்தார்.



தேவன் நாயர்
சிங்கப்பூரின் மூன்றாவது அதிபர்
1981-1985

6. வீ சோங் ஜின் (Wee Chong Jin) 1963-1990 இற்கு இடையில் சிங்கப்பூர் முதல் தலைமை நீதிபதியாக பணியாற்றிய மலாயாவில் பிறந்த சிங்கப்பூர் நீதிபதி ஆவார். அவர் 1985 இல் 3 நாட்கள் சிங்கப்பூரின் பதில் அதிபராகப் பணியாற்றினார்.

அதன் பின் சிங்கப்பூர் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் யோ பின் செங் (Yeoh Ghim Seng) சிங்கப்பூரின் பதில் அதிபராக 1985இல் 5 மாதங்கள் பணியாற்றினார்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒத்திவைக்க...

உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கும் தீர்மானம் ஏற்கெனவே கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஐதேக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தனது முகநூல் பதிவில் தெரிவித்துள்ளார்.

"ஜி77 மற்றும் சீன அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக கியூபாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பான முடிவுகள் இறுதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## மீண்டும்...

மலைகப்பல்துறை பகுதியில் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி மீது


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3482
சீட்டிழுப்பு திகதி 17.09.2023
ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கங்கள் 01 48 71 78
M 04334
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 18/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1589
H 20 | 13 44 53 71
73116

தன நிதானய
திகதி - 2023.09.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1271
F 01 07 31 37 F
24707

லக்கி 7
திகதி 18.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0067
L7 இலக்கம் 1 6
வெற்றி இலக்கினம் மீனம் | வெற்றி இலக்கங்கள் 3 0 0 5 5 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3483
சீட்டிழுப்பு திகதி 18.09.2023
ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் 11 28 56 62
O 67781
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 550
மேடம் 01 03 27 35 மேடம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/09/18
சீட்டிழுப்பு இலக்கம் 5241
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
N 2 3 5 4 2 1
தேசிய லொத்தர் சபை


சிங்களக் காடையர்களால் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அரசியல் செயற்பாட்டாளர்கள் பலர் மீது தொடர்ச்சியாக துரத்தி துரத்தி தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இதற்கு பல தரப்பிலிருந்து கண்டனம் வெளியாகியிருந்த நிலையில் நேற்றைய தினம் மீண்டும் தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பவனியானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சிமெந்தின்...

துறை சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகர இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

சந்தையில் 2,100 ரூபாயாக காணப்பட்ட சிமெந்து மூடையொன்று, தற்போது 2,200 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## நினைவூர்தியை...

ஆரம்பித்தது.

திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திக்கு தமிழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், ஊர்திப் பவனியின் பின்னால் அரச புலனாய்வாளர்கள் பின்தொடர்ந்து செல்வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ம-7)

## முல்லை வந்த...

முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸாரின் நடவடிக்கைகள் நிறைவடைய நள்ளிரவு கடந்து விட்டது. இதன்பின்னர் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் தம்பலகாமத்திலிருந்து புறப்பட்டு நேற்று அதிகாலை திலீபனின் ஊர்தி முல்லைத்தீவு வந்தடைந்தது. (ம-7)

## திலீபன்...

தியாக தீபம் திலீபன் அவர்களின் 36ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் "திலீபன் வழியில் வருகின்றோம்" என்னும் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்திப் பவனியானது பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்டு, திருகோணமலையில் வலம் வந்தபோது சிங்கள இனத்தைச் சேர்ந்த குழு ஒன்றினால் தாக்கப்பட்ட நிலையில் வவுனியாவை வந்தடைந்தது.

குறித்த ஊர்திப் பவனி வவுனியாவில் இடம்பெற்றால் பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதுடன், இன நல்லுறவு சீர்குலையும் என இருவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைய இவ் ஊர்திப் பவனிக்கு பொலிஸார் வவுனியா நீதிமன்றில் தடை உத்தரவு கோரியிருந்தனர். அதனை கவனத்தில் எடுத்த மன்று, இறந்தவர்களை நினைவுகூரும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்பதை சுட்டிக் காட்டி, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்ததுடன், இன முரண்பாடுகள் மற்றும் குழப்பங்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. (ம-7,250)

## இரு நாட்கள்...

நாளை புதன்கிழமை, நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆகிய நாட்களில் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் வி.தர்சன் அறிவித்துள்ளார்.

மருந்து தட்டுப்பாடு, வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது சுகாதார கட்டமைப்பை பாதிக்கும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அதனை தடுக்க அரசாங்கம்விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியே இரு தினங்கள் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,33)

## மனித உரிமை...

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளது.

அரசாங்கம் உத்தேச ஆணைக்குழு குறித்து கடந்த கால உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது குடும்பத்தவர்கள் மனித உரிமை பாதுகாவலர்கள் ஆகியோருடன் கலந்தாலோசனைகளில் ஈடுபடாததால் அவர்கள் அவற்றை நிராகரித்துள்ளனர் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் கடந்தகால ஆணைக் குழுக்களின் ஆதாரங்களை புறக்கணித்துள்ளதும் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது குடும்பத்தவர்கள் மனித உரிமை பாதுகாவலர்களை பாதுகாப்பு படையினரின் முன் ஆபத்திற்குள்ளாக்கியுள்ளதும் அவர்கள் மீண்டும் ஆணைக்குழுக்களின் முன்னிலையில் தோன்றினால் மீண்டும் மன அழுத்தங்களிற்கு உள்ளாவார்கள் என்பதுமே அவர்கள் உத்தேசஆணைக்குழுவை நிராகரிப்பதற்கான காரணம் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

நாங்கள் எங்கள் குரல்களை எழுப்பினால்அவர்கள் எங்களை கைது செய்வார்கள் - இலங்கையின் உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற 39 பக்க அறிக்கையிலேயே சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இதனை தெரிவித்துள்ளது.

இந்த ஆவணம் இலங்கையின் உள்நாட்டுயுத்தத்தின்போது காணாமல்போனவர்களின் (தமிழ் சிறுபான்மையினத்தவர்கள்) சார்பில் நீதிகோருபவர்கள் பரப்புரை செய்பவர்கள் செயற்பாட்டாளர்கள் பாதுகாப்பு படையினரால் கண்காணிக்கப்படுவது அச்சுறுத்தப்படுவதை ஆவணப்படுத்தியுள்ளது.

மாற்றுக்கருத்துடையவர்களை மௌனமாக்குவதற்காக அதிகாரிகள் மிகவும் ஆபத்தான பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துகின்றனர் உண்மை மற்றும் நல்லிணக்கத்தை கோருபவர்களிற்கு எதிராகவும் இதனை பயன்படுத்துகின்றனர் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2215 | வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.09.18 | தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 31 48 70 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,442,436.40
88756 918
DLB

சனிதா
திகதி 2023.09.18 | வெற்றி வாரம் 4376 | வர்ணம் இளம் நீலம்
29 35 54 61 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,852,020.00
50964 516
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3927 | வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.18 | தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 28 33 36 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,361,652/-
50900 551
DLB

திகதி 18.09.2023 | வெற்றி வாரம் 1391 | வர்ணம் பசுமை
G 24 14 54 72 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 441,412,374.20
33495 791
DLB
தொலைபேசி: 011-2 333 540-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2023.09.18 | வெற்றி வாரம் 1957 | வர்ணம் செம்மஞ்சள்
10 32 38 50 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.46,041,715.20
64021 843
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2041
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2023.09.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,364,072/-
14 66 69 70 X
17023 631
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17099)

**076 825 7716** (ஆகாஸ்)

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7273)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## Pearson International College

**Applications are called for IELTS tutors**

- Candidates should have minimum HND in English or any other academic qualification in english medium
- previous IELTS score above or equal to 6.5 is recommended (not necessary)
- Prior teaching experience would be an added advantage
- Should be able to work during weekends

Email your CV within three days of this advertisement to Pearsoncollege 2020@gmail.com, admin@picsl.lk

**Call +94 74 188 7878 for more info**

(C-7268)

**No.21,3rd Lane, Power house Road, Jaffna.**

### சிறுமியின் கை அகற்றல் விவகாரம்

# சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை நீதிமன்றுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமி ஒருவரின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல் காரணமாக கடந்த மாத இறுதியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் பெற்றோர் யாழ்ப் பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

கடந்த 13ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வந்த போது நீதவான் சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் அறிக்கை தருமாறு மூவர் அடங்கிய நிபுணர் குழுவை நியமித்தார்.

விசாரணை குழுவின் அறிக்கை கிடைப்பதற்கு மேலும் 10 நாட்கள் எடுக்கும் நிலையில் வழக்கை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு நீதவான் ஒத்தி வைத்தார்.

இந் நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் போதனா வைத்தியசாலை சார்பில் மருத்துவ அறிக்கை ஒன்றை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

(ம-7.104)

## வேலையாள் தேவை

மல்லாகம் அளவெட்டி வீதியில் இயங்கிவரும் பலசரக்குக் கடை ஒன்றில் பணிபுரிவதற்காக பெண் ஊழியர் ஒருவர் தேவை.

**076 689 4075** (viber)
**077 464 5872**
(C-7283)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும் (C-7284)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
**0777-068-777**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=



(17019)

**T.P:077 544 8503**

## தேவை

சந்தைப்படுத்தல் தொடர்பான கற்கைநெறி பூர்த்தி செய்தோர் தேவை.(ஆண்)

தொடர்பு :

**077 978 9223**

(17138)

## வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை

மிகக் குறைந்த கட்டணத்தில்
**UK - 400/=, Canada - 1000/=**
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம்நெற்**

**T.P : 0777 55 45 28**
**321, K.K.S. Road, Jaffna.**
(17124)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

(C-7284)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
**0777-068-777**
v2vacancies@gmail.com

## கேள்வி கோரல்

## பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலய மீள் நிர்மாணப் பணி

## கட்டம் : 03

**ஆலய கட்டுமானத்திற்கான கூரை அமைத்தல்**
**(சீலிங் உடனான முழுமையான பணி)**
**திட்ட வேலைக்கான மொத்தத் தொகை :**
**ரூபா 10,000,000 (அண்ணளவாக)**

மேற்குறிப்பிட்ட வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் CIDA - C6 தரத்திலுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

ஒப்பந்தகாரர்கள் யாழ். குடாநாட்டை தளமாகக் கொண்டவர்களாக இருப்பது விரும்பத்தக்கது.

வேலைக்கான கணிய அளவீடுகள் மற்றும் தொழில்நுட்ப தரவுகள் தங்களின் விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்படும்.

விண்ணப்ப படிவங்கள், மீளழிக்கப்பட முடியாத கட்டணமாக ரூபா 1000 செலுத்தி பருத்தித்துறை, 4 ஆம் குறுக்குத் தெரு, புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள திருப்பண்ட வியாபார நிலையத்தில் எதிர்வரும் 21.09.2023 தொடக்கம் 28.09.2023 வரை பெற்றுக்கொள்ளலாம்.

**அருட்பணி A.F. பெனற்**
**தலைவர், கேள்வி கோரல் குழு**
**பங்குத் தந்தை**
**புனித அந்தோனியார் ஆலயம்**
**பருத்தித்துறை.**

(C-7279)

## அறிவித்தல்

வேளாவை, அளவெட்டி மத்தியில் வசித்து வரும், திரு. வை.சுப்பிரமணியம் ஆகிய நான் கடந்த 21 வருடங்களாக அளவெட்டி மஹாஜன சபை சனமூக நிலையத்தின் தலைவராகப் பதவி வகித்து வந்துள்ளேன். தற்போது எனது தனிப்பட்ட காரணங்களுக்காக 10.08.2023 ஆம் திகதி முதல் அளவெட்டி மஹாஜன சபையின் தலைவர் பதவியில் இருந்து விலகி உள்ளேன். இது தொடர்பான பதவி விலகல் கடிதத்தை செயலாளர் திரு.அ.மயூரன் அவர்களிடம் கையளித்துள்ளேன்.

ஆகவே மேற்குறிப்பிட்ட திகதியின் பின்னர் அளவெட்டி மஹாஜன சபையினர் எடுக்கும் நிர்வாகம், நிதி தொடர்பான எந்த தீர்மானங்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை சகலருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(17126)

திரு.வை.சுப்பிரமணியம்

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 120 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு

**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17137)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org